1971 டிசம்பர் 16]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1971 ஜூலை முடிவில் தமிழக அரசிடம் விற்காமல் தேங்கி இருந்த உரங்களின் மதிப்பு ரூபாய் 7,87,09,836.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இவ்வளவு அதிகமான உரம் தேங்கி இருந்ததே, அவைகள் எல்லாம் தற்போது விற்பனை ஆகி விட்டதா? அப்படி தேங்கியிருந்த டை-அம்மோனியம் பாஸ்பேட் என்ற உரம் மிகவும் சீர்கேடான நிலையில் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டதால் அவர்கள் மிகவும் கஷ்டத்திற்குள்ளானார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதிலே எடை குறைவு ஏற்பட்டு இருந்தது என்பது அரசுக்குத் தெரியுமா? அவற்றைப்போக்க அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, அந்த உரங்கள் பெரும்பாலும் கையிலே இல்லை. டை-அம்மோனியம் பாஸ்பேட் என்ற உரம் தேங்கியிருந்தது உண்மைதான். ஆனால் தமிழக அரசு அவைகளை எல்லாம் சரிக் கட்டி, எடைகளைச் சரி செய்து பார்த்து, அவைகளை புது சாக்குகளில் போட்டு விற்க நடவடிக்கைகளை மேற்கொண்டது. இன்றையதினம் அந்த டை-அம்மோனியம் பாஸ்பேட் உரம் கையிருப்பு இல்லை. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் கொஞ்சம் கையிருப்பு இருக்கிறது.

கொடைக்கானல்—சுற்றுலா இடம்

* 484 வினா—**திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் மலையை சுற்றுலா நகரம் ஆக்க அரசு திட்டமிட்டு உள்ளதா?

(இ) ஆம் எனில், இது சம்பந்தமாக என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) கொடைக்கானல் எற்கனவே சுற்றுலா இடமாக விளங்கிவருகிறது.

(இ) கொடைக்கானலை விரிவுபடுத்த ஓர் பெருந்திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. கொடைக்கானல் நகரியத்தை விரிவு படுத்தவும், பெருந்திட்டத்தினை ஆராயவும், அக்டோபர் 4, 5 தேதிகளில் கல்வி அமைச்சர் அவர்களால் ஓர் மாநாடு கொடைக்கானலில் கூட்டப்பட்டது. அம் மாநாட்டின் முடிவுகளை அரசு ஆராய்ந்து வருகிறது.

வீடுகள் கட்ட மத்திய அரசிடமிருந்து நிதி உதவி

* 485 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினைக்கு விடையளிப்பாரா—

1969–70-ல் மத்திய அரசிடமிருந்து, நமது அரசுக்கு வீடுகள் கட்ட கூட்டுறவு இலாக்காவுக்கு தரப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : 1969-70-ல் மத்திய அரசின் ஒப்பளிப்பின் பேரில் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷனிடமிருந்து கடனாகக் கிடைத்த தொகையில் ரூ. 10 லட்சம் மத்திய தர வகுப்பினர் வீடு கட்டுவதற்கு வீட்டு வசதி வாரியம் (கூட்டுறவு பிரிவு) மூலம் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது.

Engineers in Electricity Board

*486. Q.—Dr. H. V. HANDE : **Will the Hon. the Minister** for Electricity be pleased to state—

(a) the number of engineers of the Public Works Department working on deputation in 1969-70 and 1970-71 in the State Electricity Board;

(b) the terms and conditions of deputation; and

(c) total number of engineers absorbed in the regular service of the Electricity Board?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அவையின் முன் ஓர் அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE : Sir, may I know whether any deputation met the present Hon. Minister or the previous Hon. Minister for Electricity and Expressed any grievances with regard to their service conditions?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, சமீபத்தில் என்னை வந்து பார்த்தார்கள். இது இரண்டு இலாகாக்களும் சேர்ந்து முடிவு செய்யப்படவேண்டிய காரியமாகும். விரைவில் முடிவு செய்யப்படும்.

திருப்பூரில் தொழிற்சாலைகளுக்கு மின் சக்தி வழங்கல்

* 487 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரத் தொழிற்சாலைகளுக்குப் போதிய மின்சார அழுத்தம் இல்லாத குறைபாட்டை போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : கோவை-ஈரோடு 66 கிலோ வோல்ட் கம்பி இணைப்பை 110 கிலோ வோல்ட் கம்பி இணைப்பாக மாற்றுவதற்கான வேலைகள் தொடங்கப்பெற்று நடந்து வருகின்றன. இவ்வேலைகள் பூர்த்தியானதும் திருப்பூரில் மின் அழுத்தத்தில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் இருக்கும்.

@ 218—220-ம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.